# வேண்டாத பட்டாசு!

பட்டாசுக்கும் மத்தாப்புக்கும் நெருப்பு மூட்டிவிட்டு, அந்த ஒலியைக் கேட்டும் ஒளியைக் கண்டும் மகிழணுமெனக் காத்திருந்தன குழந்தைகள்.

இதற்குள் தபால் மூலம் வந்த நற்செய்தி வீட்டுப் பெரியவர்களுக்கு இன்பமூட்டிவிட்டது.

குழந்தைகளின் இன்பத்தைத் தங்கள் இன்பமாகப் பெரியவர்கள் கருதாத அதிசயம்போல. இப்போது பெரியவர்கள் மகிழ்ச்சியைத் தங்கள் மகிழ்ச்சியாகக் குழந்தைகள் கொண்டுவிட்டனர்.

"அத்திம்பேர் வரப்போறார் டோய்!" என ஆரவாரித்தனர். நற்செய்தி பத்மாவின் முகத்திற்கு ஒளி தந்தது. அவளுடைய பெற்றோரின் குரலுக்கு ஒலியைக் கொடுத்தது. அவர்களுக்கும் நெஞ்சில் ஒளி உண்டு. எனினும், பத்மா ஒளி மட்டும் கொண்ட மத்தாப்பு போல இருந்தாள். அவளுடைய தாய் தந்தையர், பட்டாசுப் போல ஒலிமிகுந்த குரலும், ஒளி தெறிக்கும் தொனியும் கொண்டவராக இருந்தனர்.

வீட்டின் முன்கட்டிலே கலகலப்பு, கும்மாளம். பின் கட்டின் முன்னணிக் கதவண்டை நின்று இந்தக் குதூகலக் காட்சியை எட்டிப் பார்த்துக்கொண்டிருந்தது ஒரு உருவம்.

வந்திருக்கும் நற்செய்தியின் பெரும் பங்குக்கும், மகிழ்வுக்கும் உரியவளான இளம்பெண் பத்மாவின் உருவம் அல்ல அது.

அந்தச் செய்தி கொணர்ந்த கலகலப்பில் கொஞ்சமும் பங்கு கொள்ள முடியாமல், ஏற்படப் போகும் பொறுப்புக்கு மட்டுமே உரியவளான சமையற்கார மீனாக்ஷியம்மாளின் முதிய உருவம் அது.

இன்னும் உற்சாகப் பெருக்கான பேச்சுக்கள் உதிர்ந்து கொண்டிருந்தன நடுக்கூடத்தில்.

"இதோ பாருங்கோ! தலை தீபாவளிக் கதைகள்ளாம் படிச்சிருக்கேளோல்லியோ! அக்காவுக்கும் அத்திம்பேருக்கும் தொல்லைப்படுத்தாமல் நடந்துப்பேளோன்னோ?"

சாமிநாதனின் குரல்! என்னமோ விஷயம் புரிந்தாற்போல பெரிய குழந்தைகள் கோபியும் லலிதையும் கொல்லென்றார்கள். அந்தப் பக்கமாகவே நின்றுகொண்டிருந்தாள் பத்மா. இப்போது அவள் மெல்ல நகர்ந்துகொண்டுவிட்டாள். பின்கட்டுப் பக்கமாக வந்து நின்றாள்.

"ஏம்மா, பத்மா! ஆம்படையான் வருகிறதாக கடிதாசு வந்திருக்கா?"

கேள்வியைச் செவியுற்றதும் திரும்பிப் பார்த்தாள் பத்மா. மீனாக்ஷியம்மாள் ஐந்தாறு அடிகளுக்கு அப்பால் உள்ள கதவின் உட்புறமாக நின்றிருந்தாள்.

"ஆமாம்" என்றாள் பத்மா.

"கூடவே அழைச்சிண்டு போயிடப் போறாளா? வேறே ஏதாவது எழுதியிருக்காளா?" என்று மறு கேள்வி வந்தது.

"போங்கோ மாமி! . . எனக்கா தெரியும்? கேள்வியைப் பாரு கேள்வியை!" எனக் கடுப்புடன் பதில் சொல்லிவிட்டு, அங்கிருந்து விரைந்தாள் பத்மா.

மீனாக்ஷியம்மாளின் முகம் சுண்டிப்போயிற்று.

ஏதோ வயதுக்கேற்ற தன் மனப்போக்கினால் ஏற்பட்ட ஆவலை அடக்க முடியாமல் கேட்டுவிட்டதற்கு அவள் அப்படிச் 'சிள்'ளென விழ வேண்டுமா?

எல்லாம் நல்ல குணம்தான்; வாய்த்துடுக்குத்தான் கொஞ்சம்!' எனச் சொல்லிக் கொண்டாள் மனத்துள்.

ஆனால், அடுத்த வினாடி வேறொரு சமாதானமும் ஏற்பட்டது.

'அவளைக் கேட்டால் பின் எப்படிச் சொல்லுவாள்? அவளைக் கேட்கலாமா? கேட்டது பிசகு. வெட்க மேலீட்டால் அவள் அவ்வாறு கடுகடுப்புக் காட்டிப் பதில் அளித்ததைத் நான் தவறாக ஏற்பது அதைவிட பெரிய தவறு . . . நாணம்தான் காரணம் . . . '

சுண்டின முகம் தெளிவுற்றது. மீனாக்ஷியம்மாள் மெல்ல உள்ளே போய்விட்டாள். ஜபமாலையுடன் உட்கார்ந்தாள்.

"மாமீ! மாப்பிள்ளை வருகிறதாக இன்னிக்கே நல்ல வேளை கடுதாசி வந்துடுத்து! ஒரு வாரம் இருக்கு; எப்படியோ நீங்கதான் பொறுப்பா, உங்கள் மாப்பிள்ளை மாதிரி நினைச்சு, சிரத்தை வச்சு கவனிச்சுக்கணும்! என்னென்ன எப்படி செய்யணுமோ, நன்னா நடத்திடுங்கோ!"

கொஞ்சம் நேரங் கழித்து பத்மாவின் தாய் கூறிய பணிவான இவ்வார்த்தைகளைக் கேட்டு, பத்மாவின் கடுமொழிகளை மன்னித்துவிட்டது, மீனாக்ஷியம்மாளின் மனசு.

"அதுக்கென்னம்மா! என்னாலே முடிஞ்சதை செய்துடறேன்! உனக்கு மாப்பிள்ளைன்னா எனக்கு மட்டும் அசலா? என் பெண் மாதிரிதான் பத்மா. 'அவ கல்யாணத்துக்கு இருந்து பார்க்கல்லையே' அப்படின்னு நான் சொல்லல்லையா? இப்பவாவது இரண்டு பேருமா மணைமேலே உட்காரறதைப் பார்க்கப் போறேனே, அதைச் சொல்லு! . . . எனக்கும் செய்யறதுக்குக் கொள்ளை ஆசைதான்!" என்று பதிலளித்துவிட்டு, ஜபமாலையை மீண்டும் தூக்கிப் பிடித்தாள் மீனாக்ஷியம்மாள்.

"சரி மாமி! . . நீங்க ஜபம் பண்ணுங்கோ! நாழியாயிடுத்து! சாப்பிட வந்துடுவா பத்து நிமிஷத்துலே!" என்று சொல்லிவிட்டு, சமையலறையை விட்டு வெளியே வந்தாள் ஸீதாலக்ஷ்மி.

"என்னமோ மாப்பிள்ளை வரார்னா, சந்தோஷத்துக்கு நடுவிலே குழப்பம் பயமும்தான் ஏற்படறது! இத்தனைக்கும் சம்பந்தின்னு யாரும் கூட வரவும் போறதில்லை; நாம் செஞ்சு அனுப்புகிற சீர்செனத்திக்குக் குத்தம் சொல்லவும் மாப்பிள்ளைக்கு யாருமில்லை. ஆனாலும், என்னமோ குழப்பமாத்தான் இருக்கு!" என்று சொன்னாள் ஸீதாலட்சுமி, தன் கணவர் சாமிநாதனிடம்.

"நல்ல பயம்! எனக்கென்னவோ என்னிக்குமே மாப்பிள்ளை ஸ்தானத்திற்கு அப்படிப்பட்ட பொல்லாப்புக் கொடுக்கிற மனசோ, எண்ணமோ இருக்கல்லைம்மா! . . . அதுக்கு ஏற்றாப்போலவே மாப்பிள்ளையும் கிடைச்சுட்டார்," என்று சொன்னார் சாமிநாதன் வெகு அனாயாசமாக.

"எனக்கும் ஏத்த மாப்பிள்ளை தான்! நான் ஒரு சம்பந்தியம்மாளைப் படைச்சிருந்தால் எனக்குச் சமாளிக்கச் சக்தியோ அனுபவமோ ஏது! 'பெப்பே'ன்னு முழிச்சுண்டு, திண்டாட வேண்டியதுதான்! சொல்லித்தரவாளும் கிடையாது, செய்து பழக்கமுமில்லே. இது ஒரு தேசம் விட்டுத் தேசம்? . . . முதல் வீட்டுக் கல்யாணம், இல்லையா! . . . நல்ல வேளை, மாப்பிள்ளை பக்கத்து மனுஷா, கிட்டின மனுஷா கிடையாது! . . . அப்படியும் கொஞ்சம் பயமாத்தான் இருக்கு . . . அவருக்கு ஒரு அதிருப்தியும் இருக்கக்கூடாதேன்னு கவலையாத்தான் இருக்கு!" என்றாள் ஸீதாலக்ஷ்மி; மீண்டும் 'கவலை' முத்தாய்ப்பு வைத்தாள்.

"அது நிஜந்தான்! . . . மாப்பிள்ளைக்கு திருப்தியாத்தான் எல்லாம் நடத்தணும்! . . . பயம், பீதின்னு, இருக்க வேண்டாமே தவிர, அவருக்கு மரியாதை, திருப்தியெல்லாம் தரணும்! . . . " என்றார் சாமிநாதன்.

பிறகு ஏதோ ஆலோசிப்பவர் போல, "உம் ஒரு பாட்டுப் படிச்சிருக்கேன்! ரொம்ப அழகான அர்த்தம்...." என்று கூறி நிறுத்தினார்.

"என்னவாம் அர்த்தம்?" என்று தூண்டிக் கேட்டாள் ஸீதாலக்ஷ்மி.

"மாப்பிள்ளைக்கு பயந்துண்டு மரியாதையாய் நடத்துகிறது எதுக்குன்னு தெரியுமா? அவரும் பிள்ளைதான், பிள்ளை மாதிரியே தான். ஆனால், எப்போதோ வீட்டிலேருந்து கோவிச்சுண்டு ஓடிப்போன பிள்ளை! பல வருஷங்கள் கழிச்சு வீட்டுக்குத் திரும்பி வருகிற பிள்ளை! மறுபடியும் ஓடிப்போயிடுவானோ. கோபம் கீபம் ஏதாவது வந்தால், மனங்கோணி மறுபடியும் மறைஞ்சுடுவானோ, அப்படின்னு வீட்டாருக்குப் பயம்! கொள்ளை ஆசை அபிமானம் வச்சிருந்தாலும், பயந்து, பணிவா, மரியாதையாய் நடக்கிறாளாம் இந்தப் பிள்ளையிடம்! . . . எப்படி அர்த்தம்?"

சாமிநாதனின் குரல் ஓங்கியிருந்தது. இந்த விநோத வியாக்கியானத்தை உற்சாகமாகச் சொல்லுகையிலே.

வெகு ஸ்வாரஸ்யமாக விளக்கத்தைக் கேட்டுக்கொண்டிருந்த ஸீதாலக்ஷ்மி, வியப்புடன், "எவ்வளவு நன்னாயிருக்கு அர்த்தம்! எங்கே, எந்தப் பாட்டுலே எழுதியிருக்கு இது?" என்று கேட்டாள்.

"என் சிநேகிதர் ஒருத்தர் எழுதின கவிதை இது. ஆனால், பாவம், அவரோட அருமையான கவிதைக்கெல்லாம் இன்னும் பேரும் புகழும் வரல்லே!"

"யாரு அவர்?"

சாமிநாதன் சொன்னார் அந்தக் கவியின் பெயரை.

அதே சமயம் பின் கட்டின் முன்னணிக் கதவண்டை மீனாக்ஷியம்மாளின் உருவம் தோன்றியது.

"இதோ வந்துட்டோம், மாமி!" என்றாள் ஸீதாலக்ஷ்மி. குழந்தைகளின் பெயர்களைச் சொல்லிக் கூவியழைத்தாள், உணவு அருந்தணுமென்று. சமையல் உள்ளில் ஸீதாலக்ஷ்மி நுழைகையில், மீனாக்ஷியம்மாள் ஸீதாலக்ஷ்மியை நெருங்க நோக்கினாள்.

"ஏம்மா, ஸீதாலக்ஷ்மி! இப்போ உங்காத்துக்காரர் ஏதோ பேர் சொன்னாரே, அவரோட ஊர் பேர் என்னன்னு சொன்னார்? பேரூரா?" என்று கேட்டாள்.

'ஆமாம், பேரூர்தான்! . . . ஏன், உங்களுக்குத் தெரியுமா?"

"தெரியும்; சொந்தம்தான் எனக்கு . . . "

இதற்குள் பத்மா அறையுள் நுழைந்தாள்.

"என்னம்மா, இலை போடவேயில்லை, கூப்பிட்டாச்சா சாப்பிட!" என்று கேட்டுக் கொண்டே வந்தாள்.

"இதோ போட்டுடறேன்!" எனப் பரபரப்புடன் இலைக்கட்டு அருகே குனிந்தாள் மீனாக்ஷியம்மாள்.

"உங்களுக்கு அவர் என்ன சொந்தம் மாமி?" என்று விட்டுப்போன பேச்சைத் துவக்கினாள் ஸீதாலக்ஷ்மி. விவரம் அறிய ஆவல் அவளுக்கு.

"யாரு சொந்தமா?" எனத்திடுக்கிட்டாற்போல கேட்டாள் பத்மா.

"அப்பா ஒரு கவியுடைய பேர் சொன்னார். அவர் ஏதோ சொந்தமாம் மீனாக்ஷி மாமிக்கு!" என்றாள் ஸீதாலக்ஷ்மி. அவள் எகத்தாளமாகவோ, கிண்டலாகவோ சொல்லவில்லை அதை. ஆனால், பத்மாவுக்கு ஏனோ வேடிக்கையாக இருந்தது.

"ஆமாம், வேறே வேலையென்ன மாமிக்கு!" எல்லோர் சமாச்சாரமும் வேணும்! எல்லோர் பேச்சும் வேணும்!" என்றாள் பத்மா, வெடுக்கென.

"கண்டபடியெல்லாம் பேசாதே. பத்மா! உனக்கு மாமியார் மாமனார்னு இல்லாட்டாலும், உலகத்தோடு, அடக்கமா பழகணும், சொல்லுலே நிதானம் வேணும்!" என்றாள் ஸீதாலக்ஷ்மி.

"ரொம்ப சரி!" என முணுமுணுத்தாள் பத்மா.

சாமிநாதன் கைகால் கழுவிக்கொண்டு சாப்பிட வந்துவிட்டார், அங்கு அந்த இடத்திலே நிலவிய ஒரு தினுசான நிலைமையினால், அதிகம் சந்தடியின்றி சாப்பாடு நடந்தது. சாப்பாட்டுக்குப்பின் கணவனுக்கு வெற்றிலை பாக்கு எடுத்துப் போய் கொடுத்தாள் ஸீதாலக்ஷ்மி.

"அந்தப் பேரூர் கவி சொன்னேளே, அவர் ஏதோ உறவுன்னு சொல்ல வந்தாள் மீனாக்ஷியம்மா. அரைகுறைப் பேச்சிலே வந்தாள். பத்மா; மாப்பிள்ளையைத்தான் உறவுன்னு மாமி சொல்ல வந்துட்டான்னு நினைச்சுட்டா போலிருக்கு! 'யார்?'ன்னு திடுக்கிட்டுக் கேட்டாள். நான் விவரமா சொன்னாலும் தன்னோட தப்புன்னு ஒப்புக்க இஷ்டமில்லே! 'மாமிக்கு எல்லா வம்பும் பேச்சும் வேணும்னு!' சிடுசிடுத்தாள். என்னமோ சிறுபிள்ளைத்தனம், எல்லாம் தெரிஞ்சும் இருக்கு தெரியாமலும் இருக்கு!" என்று சொல்லி மெல்லச் சிரித்தாள் ஸீதாலக்ஷ்மி.

"அவள் அவரைப் பத்தியே நினைச்சிண்டிருப்பாளோல்லியோ, கட்டாயம் தோணியிருக்கும், 'மாப்பிள்ளையா சொந்தம்னு!' ஆனால், ஏன் திடுக்கிடுவானேன்!" ஏழைகள் உறவுக்காரா இருக்கமாட்டாள்னு அவள் நினைப்பானேன்! அது என்ன இழிவா? எனக்குச் சொந்தக்காரா எத்தனை பேர் ஹோட்டல்லே வேலை செய்யறா, பரிசாரகம் செய்யறா அவளுக்குத் தெரியாதாக்கும்! நான் என்னமோ இந்த கோதாவரி ஜில்லாவுக்கு வந்துட்டேன், அந்தஸ்தாவும் இருக்கேன்! பத்மாவுக்கு ஒரு விவரமும் தெரியாது! . . . சொல்லணும்!" என்று கூறினார் சாமிநாதன்.

"உம்! . . .அவளுக்கு இன்னிக்கு உள்ளூரச் சந்தோஷம். அதை மறைக்க சிடுஞ்சி வேஷம் போடறா! . . .அதுவும் தெரியறது!" என்றாள் ஸீதாலக்ஷ்மி, மென்னகை முகத்தில் ஊசலாட.

"அதுவும் தெரியும் எனக்கு! நீ போ சாப்பிட! மாமியும் காத்துண்டிருப்பா!" என்று சொன்னார் சாமிநாதன்.

கீழே விழுந்திருக்கும் வெற்றிலைக் காம்புகளைப் பொறுக்கிக் கையில் எடுத்துக்கொண்டு, அங்கிருந்து நடந்தாள் ஸீதாலக்ஷ்மி.

சமையலறையில் தலை தீபாவளிக் கோடனைகளும் திட்டங்களும் பற்றி பேச்சுத் துவங்கியது.

சில வினாடிகள் யோசனை செய்பவர்போல அண்ணாந்து பார்த்துக்கொண்டிருந்த சாமிநாதன், பத்திரிகையைக் கையில் எடுத்தார். அதிலே ஈடுபட்டார்.

தீபாவளிக்கு தீப வரிசைகளையும், தீப ஒளிகளையும் வீடு முழுதும் வைத்துக் கொண்டாடும் வழக்கம் வட நாட்டில் இருப்பதுபோல தென்னாட்டுத் தமிழ்நாட்டில் இல்லை. ஆனால், மாப்பிள்ளையை இந்தப் பண்டிகைக்கு அழைத்து வைத்துக் கொண்டாடும் வழக்கம் தமிழருக்கே உரித்தான சம்பிரதாயம். 'விளக்குகளும், அதன் ஒளியும், வேண்டாம், மாப்பிள்ளை இருக்கையில் வீடு முழுதும் வீசும் ஒளியும் வீட்டாரின் குதூகல முகப் பிரகாசமுமே போதும்,' என்றுதான் தமிழர் ஏற்படுத்திக்கொண்டனரோ இந்த வழக்கம்?

மாப்பிள்ளை ராஜன், ராஜா போலவே வரவேற்கப்பட்டான். ராஜபாட்டையைப்போல அலங்காராதி சௌகரியங்கள் செய்யப்பட்டுத் தயாராயிருந்த மாடியறைக்கு அழைத்துச் செல்லப்பட்டான். அரசனின் வருகைக்கு முன்னும், அரசனின் வருகையின் போதும் எழும் குதூகல ஆரவாரம்போல வீட்டிலே ஆரவாரமும், குதூகலமும் ஓங்கி ஒலித்தன. அரச சமூகத்திலே எழக்கூடிய ஆவலும், ஆர்வமும், பணிவும் பாசமும் எழுந்தன அனைவருள்ளத்திலும். சாமிநாதன் ரயிலடிக்குப்போய் மாப்பிள்ளையை அழைத்துக்கொண்டு வந்தார். வாசற்படிக்கு உட்புறமாக நின்றிருந்த ஸீதாலக்ஷ்மி நாணிக்கோணித் தயங்கி வார்த்தைகளை விழுங்காமல், நேர்மையாக மாமியார் உரிமையுடன் நிமிர்ந்து நோக்கி, மாப்பிள்ளையை வரவேற்றாள். ஒடுங்கி நின்று நாணி ஒளியாமல், அடக்கமாக மட்டும் சுவருக்கு ஒட்டினாற்போல நின்றிருந்த பத்மா, ஒருமுறை கணவனை நேரடியாகப் பார்த்துச்

சந்தித்ததும், மெள்ள நகர்ந்து கொண்டாள். குழந்தைகள் வண்டிச் சத்தம் செவியுற்றதும் வாசற்படியில் குழுமி அத்திம்பேரைச் சுற்றிக்கொண்டதால்.

"உஷ்! . . .என்னடாது, இங்கே வாங்கோ!" என அரைகுறைப் பொருமலோடு பத்மா சொன்னதையும், அவளுடைய அடக்கியிருந்த குரல் ஒலியையும் கேட்டுத்தான் ராஜன் அவளை உறுத்து நோக்கி, மலர விழிக்க நேர்ந்தது. நாணங்கொண்டாள் பத்மா.

ஆவலுடன் உள்ளிருந்தவாறே கூர்ந்து பார்த்துக்கொண்டிருந்த மீனாக்ஷியம்மாள், மாப்பிள்ளை வீட்டுள் நுழைந்ததும், சமையற்கட்டிற்குள் மறைந்துகொண்டாள்.

மாப்பிள்ளையை மாடிக்கு அழைத்துப் போய்விட்டார் சாமிநாதன். ஸீதாலக்ஷ்மி மீனாக்ஷியம்மாள் இருக்குமிடத்தைத் தாண்டிக்கொண்டே புழக்கடைப் பக்கம் போனாள், வெந்நீர் பார்த்து ஸ்நானத்திற்குத் தயார் செய்ய.

"வெந்நீர் சரியாயிருக்கும்மா, ஸீதாலக்ஷிமி!" என்றாள் மீனாக்ஷியம்மாள்.

"ஓஹோ . . . " என்பதுபோல நின்றாள் ஸீதாலக்ஷ்மி. பிறகு, "மாப்பிள்ளையைப் பார்த்தேளா மாமி! கொஞ்சம் நிறம் மட்டுன்னாலும், நல்ல கம்பீரம், முகத் குறுகுறுப்பு! இல்லையா? நல்ல குணம்! ரொம்பக் கெட்டிக்காரராம்! படித்தபோதும், இப்போ வேலையிலேயும்! . . .ஏதோ பத்மாவோட அதிஷ்டம்தான் . . ."

"சந்தேகமா என்ன? . . . ராஜா வாட்டமாத்தான் இருக்கான் மாப்பிள்ளை! . . . பார்த்துட்டுதான் உள்ளே வந்தேன் நானும்!" என்றாள் மீனாக்ஷியம்மாள்.

"பேரும் ராஜாதான்!" என்றாள் ஸீதாலக்ஷ்மி.

"அப்படியா? . . . மாப்பிள்ளை, மாப்பிள்ளைன்னே சொல்லிண்டு இருந்தேன், பேர் தெரியல்லே! கேக்கவும் எனக்குத் தோணலே! என்ன ராஜா?.... நடராஜனா, தியாகராஜனா"

"தேவலையே மாமி நீங்க! முதல்லேயே சரியான பேர் சொல்லிவிட்டேளே! நடராஜன்! . . . சுருக்கி வைச்சுண்டு இருக்கிற பேரு ராஜனாம்!" என்றாள் ஸீதாலக்ஷ்மி. மாப்பிள்ளையின் பெயர்களை உச்சரிக்கையிலே மாத்திரம் குரல் தாழ்ந்தது, முகத்தில் லேசாக நகை படர்ந்தது.

"என் பிள்ளைபேரும் நடராஜன் தான்! அதான் என் வாயிலே சட்டுன்னு அந்தப் பேர் வந்தது!" என்றாள் மீனாக்ஷியம்மாள்.

'பத்மா சொல்றது சரிதான்! இந்த மாமி எல்லாத்துக்கும் தன்னையும் தன்னைப்பத்தியும் சொல்லிக்க ஆரம்பிச்சுட்டா!' என்று தோன்றியது போலும் ஸீதாலக்ஷ்மிக்கு. ஒரு மாதிரி மௌனமாக அங்கிருந்து வெளிப்பட்டாள்.

சாமிநாதன் மாடிப் படிகளிலிருந்து இறங்கி வந்து கொண்டிருந்தார். "அவரைக் குளிக்க வரச்சொல்லுங்கோ!" என்றாள் ஸீதாலக்ஷ்மி.

மாப்பிள்ளை ராஜன் குளிப்பதற்கு மாடியிலிருந்து இறங்கி வந்தான். அரையிலே வேஷ்டி, தோள் மீதினின்று முதுகிலும் மார்பிலுமாகத் தொங்கும் 'டர்க்கிஷ்' துண்டு, கையில் சோப்புப் பெட்டி இவற்றுடன் வெகு எளிமையான, கம்பீரமான தோற்றத்துடன் இருந்தான். சரசரவென சமையற்கட்டின் வழியாகப் போகத் தொடங்கினான்.

"மாப்பிள்ளை! வாருங்கோ!" என்ற குரல் கேட்டு தலை நிமிர்ந்தான் ராஜன்.

இப்போது, வந்து பதினைந்து நிமிஷங்களுக்குப் பின், தன்னை வரவேற்கும் குரலைக் கேட்டு, குரலுக்கு உரிய உருவத்தைக் கண்டு ஒரு வியப்புக் குறி தெறித்தது அவன் கண்களிலே.

"வேறே யாரும்கூட வரவில்லையா? அம்மா அப்பா எல்லாம் வரச் சௌகரியப்படல்லைன்னா, மாப்பிள்ளைத் தோழனாவது வர வேண்டாமா? . . . ."

"யாரும் வரத்துக்கு இல்லே!" இந்த ஒரே பேச்சுப் பேசிவிட்டு, விடுவிடென்று முன் நடந்தான் ராஜன்.

'ஏன்? நான் ஒருத்தனாய் வந்து குஷியாய் இருப்பது பிடிக்கல்லையோ இந்தக் கிழத்திற்கு?' என்று எண்ணும் தோரணையில், பேச்சுப் பிடியினின்று விடுபட்டுக் கொண்டான்.

புழக்கடைப் பக்கம் மாப்பிள்ளை போவதைக் கவனித்து அவனுக்கு வெந்நீர் அறையைக் காட்டணுமென்று, மாப்பிள்ளைக்குப் பின்னாலேயே மெதுவாகத் தொடர்ந்து வந்து கொண்டிருந்த ஸீதாலக்ஷ்மி, மாப்பிள்ளை சமையலறையில் நின்ற இரண்டு நிமிஷங்களையும் கொதிக்கும் மனதுடன் கடத்தினாள். ராஜன் விடுவிடென நடை தொடர்ந்ததும், அவளும் தொடர்ந்தாள். மீனாக்ஷியம்மாள் அருகே சிறிது நின்று விட்டு, "மாமி! . . . ஏதாவது அசந்தர்ப்பமா கேள்வியும் பேச்சும் பேசாதீங்கோ! நான்தான் சொல்லியிருக்கேனே 'அவருக்கு யாரும் கிடையாதுன்னு!' இதென்ன அசட்டு உபசாரக் கேள்வி? ஏதாவது கேட்கணுமென்னு இப்படிக் கேட்கணுமா? நீங்க குசலம் விசாரிக்கணுங்கிறதுதான் இப்போ அவ்வளவு முக்கியமா போச்சா? நீங்கதான் அவரைப் பார்த்தது இல்லையே, கேட்கணும்னு என்ன கட்டாயம் வந்தது?" என்று தாழ்த்திய குரலில் சரமாரியாகக் கேட்டுவிட்டு எச்சரிக்கை செய்துவிட்டு, புழக்கடையில் மாப்பிள்ளை வெந்நீர் அறைக்காக நாற்புறமும் நோக்குவதைக் கண்டு, பரபரப்புடன் விரைந்தாள்.

"இதோ, இதான் வெந்நீர் உள்! . . . ஜலம் மொண்டு வச்சிருக்கு!" என்று சொல்லி வந்தாள்.

கூடத்தில் உட்கார்ந்திருக்கும் கணவரிடம் வந்தாள் ஸீதாலக்ஷ்மி.

"இந்தப் பெண்ணும் ஒரு அசடாயிடுத்து. ஜலம் பார்த்துத் தரப்போக மாட்டேங்கறது! சமையற்கார மாமியும் என்னவோ அசட்டுப் பிசட்டுன்னு ஆயிட்டா மாப்பிள்ளை வந்ததும்! கடைசியிலே நம்ப என்ன ஜாக்கிரதையாய் இருந்தாலும், அசட்டுத்தனம் நடந்துடறது!" என்றாள் சலிப்புடன்.

மீனாக்ஷியம்மாள் எட்டிப் பார்த்து விட்டுத் தலையை உள்ளிழுத்துக் கொண்டதைக் கவனித்துவிட்டு, மேலே பேசாமல், பெண் பத்மாவைத் தேடிக்கொண்டு போனாள் ஸீதால்க்ஷ்மி.

மாப்பிள்ளை குளித்துவிட்டுத் திரும்புகையில் மீனாக்ஷியம்மாள் குரல் கேட்டது.

"அந்தத் துண்டை கசக்கி உலத்திடறேன். வச்சுடேனப்பா! டிபன் ஆயிடுத்து, சீக்கிரம் வந்துடு!" என்று சொல்லிக் கொண்டிருந்தாள்.

இதைக் கவனித்தாலும் கவனிக்காததுபோல வந்து கொண்டிருந்த ராஜனுக்கு சீதாலக்ஷ்மி எதிர்ப்பட்டாள்.

'என்னமோ அசடு, பேசுகிறது!' என்பதுபோல இருவரும் பார்த்துக்கொள்ள நேர்ந்தது.

"நீங்க மாடிக்குப் போங்கோ! டிபன் கொண்டு வரச்சொல்றேன்!" என்று அரைகுறைப் புன்முறுவலுடன் மாப்பிள்ளை ஏறி மறைந்ததும், மீனாக்ஷி மாமியிடம் வந்தாள், ஸீதாலக்ஷ்மி.

"மாமி! என்ன இது? தலை தீபாவளி நடத்திக் கொடுக்க உங்களைவிட எனக்கே தெரியும்போலிருக்கே! டிபனுக்காக, மாப்பிள்ளையை சமையலுள்ளே வரச் சொல்லி உட்கார்ந்தறதா? அழகு தான், போங்கோ! நாசூக்கா டிபனை, தட்டுலே வச்சு அனுப்பறது இல்லையா? நான் கூட சொல்லியிருக்கேனே!" என்று கடிந்து கேட்டாள்.

"என்னமோ, இட்டிலியும் சட்டினியும் டிபன் ஆச்சே! இங்கே வந்து சாப்பிட்டா வேணுங்கிறது போட சௌகரியமாவும், பாந்தமாவும் இருக்கும்போல தோணித்து, சொன்னேன்" என்று சொன்னாள் மீனாக்ஷியம்மாள்.

'சரியான பேச்சுத்தான்" என்று மனத்துள் தோன்றினாலும், ஸீதாலக்ஷ்மிக்கும், 'மாமிக்குத் தெரிந்த நாசூக்கு அவ்வளவுதான்!' என்ற எண்ணமும் எழவே, "அது சரிதான் மாமி! ஆனாக் கூட கொஞ்சம் தோரணையாய் இருக்கிறவா சிறு வயசு! நல்ல பீங்கான் தட்டுலே இரண்டு இட்லி கொண்டு போய்க் கொடுத்தாலும், அதுதான் வயிறு நிரம்பின மாதிரி இருக்கும்! அதுக்குத்தான் சொல்றது!" என்று பொதுவாகச் சொல்லிவிட்டு, அழகிய வேலைப்பாடுள்ள ஒரு பீங்கான் தட்டை எடுத்து, டிபன் எடுத்து வைத்தாள். பத்மாவைத் தேடிக்கொண்டு போய், அவள் கையில் கொடுத்துவிட்டு, மாடிக்கு அனுப்பி வைத்தாள்.

அதற்கப்புறம் பல சமயங்களிலும் சீதாலக்ஷ்மி மீனாக்ஷியம்மாளிடம் சிறிது அதிகாரத் தொனியுடனே பேசினாள்; காரியம் ஏவினான். மாப்பிள்ளை வந்திருக்கும் சமயம் சமையற்கார மாமி எப்போதையும் விட மந்தமாகவும், அதிகப் பிரசகித்தனமாகவும் வேலை செய்ய ஆரம்பித்துவிட்டதாகத் தோன்றவே, 'ரொம்ப இடங்கொடுத்துவிடக்கூடாது' என்ற முன்னெச்சரிக்கையேதான் காரணம்!

விடியற்காலையில் எழுந்து மங்கள ஸ்னானத்தின் துவங்கும் முன், "மாமி! எல்லாருக்கும் டக்டக்னு ஜலம் பார்த்து வச்சுடுங்கோ! குழந்தைகளுக்கும் தேய்ச்சுடுங்கோ எண்ணெய்! கொஞ்சம் பரபரன்னு கவனிச்சுக்கோங்கோ!" என்றாள் சீதாலக்ஷ்மி.

"ஆகட்டும்மா! பேஷா எண்ணெய் தேய்ச்சுடறேன்! . . . பாரு, வெந்நீர் தவலையிலே மாப்பிள்ளை பணம் போடணும்! அது ஜலம் பார்த்து இறைச்சுத்தரவாளுக்குச் சேரும்னு சொல்லுவா! வழக்கம்!" என்றாள் மீனாக்ஷியம்மாள்.

"ஓஹோ! ஆமாம் போலிருக்கு! சரி; சொல்றேன்! ஏன், நாங்களே நாலோ, ஐந்தோ போட்டுட்டாப் போறது! . . . மாப்பிள்ளை கிட்ட இதை எப்படிச் சொல்றது! . . . நான் போட்டுடறேன்!' என்றாள் ஸீதாலக்ஷ்மி.

"ஊஹூம், அதெல்லாம் கூடாது! . . . மாப்பிள்ளையேதான் வந்து போட்டுட்டுப் போகணும்! அவர் கைப் பணம்தான் விழணும் நான் பணத்துக்குச் சொல்லல்லை! சம்பிரதாயத்துக்குத்தான் சொல்றேன்! . . . உனக்குச் சொல்ல கூச்சமாயிருந்தால், நானே சொல்றேன் இரு, எனக்கென்ன சங்கோஜம்?" என்றாள் மீனாக்ஷியம்மாள்.

"வேண்டாம்! நானே சொல்லிடறேன். இருங்கோ!" என்று சொன்னாள் ஸீதாலக்ஷ்மி.

'ஆமாம், உங்களுக்கு கேட்க சங்கோசமா என்ன, தெரியுமே! பண விஷயமான சம்பிரதாயத்தை மட்டும் கட்டாயமாகச் சொல்லத் தெரியும், பேச முடியும்! சந்தேகம் வேறேயா!' என்ற உட்பொருமலுடனேதான் சொன்னாள்.

சாமிநாதன் மூலம் மாப்பிள்ளைக்குச் சொன்னாள் 'வழக்கம்'. "ஒரு ரூபாயோ, இரண்டு ரூபாயோ போடச் சொல்லுங்கோ! . . .அவர் கைப்பணம். அதிகம் சொல்லிவிடாதேங்கோ!" என்றாள்.

"ஸீதா! மாப்பிள்ளை ஐந்து ரூபாய் போடறாராம்! . . . " என்று சொல்லிக்கொண்டே மாப்பிள்ளை பின்தொடர வந்தார், சாமிநாதன்.

"நோட்டாயிருக்குன்னு ஐந்தாப் போடணும்னு சொல்லியிருக்கப் போறார், பத்திரம்! வெந்நீர்லே போடணும் பணம்!' என்று கூறிச் சிரித்தாள் ஸீதாலக்ஷ்மி.

"அடடா, நிஜந்தான்! மாமி சொல்றது சரிதான்! ரூபா நோட்டுதானே கொண்டுவரேன். இதோ!" என்று காட்டிவிட்டு, "வெள்ளி ரூபா இல்லையே! சில்லரை கொடுங்கோ!' என்று மாமனாரிடம் நோட்டை நீட்டினான் ராஜன்.

"இருக்கா, ஸீதா?" என்று மனைவியைக் கேட்டார் சாமிநாதன். "பார்க்கறேன்' என்று உள்ளே போகக் கிளம்பினாள் ஸீதாலக்ஷ்மி.

'என்னண்டையிருக்கு, தரேன்!' என்று முன் வந்தான் மீனாக்ஷியம்மாள்.

"எப்படியும் உங்களுக்குச் சேர்ரதுதானே மாமி! இப்படியே வச்சுண்டுங்கோளேன் நோட்டை! வெந்நீர்த் தவலையிலே போடாட்டா என்ன?" என்றார் சாமிநாதன்.

"அதென்ன அப்படிச் சொல்றேள்! நான் சம்பிரதாயத்துக்குன்னா சொல்கிறேன்! பணத்துக்கா சொல்றேன்?" என ஏறெடுத்துக் கேட்டாள் மீனாக்ஷியம்மாள். அந்தக் குரலில் சிலிர்ப்பும் கலவரமும் கண்டார் சாமிநாதன்.

"ஓஹோ, அப்போ, சில்லரையா அண்டாவிலே போடத்தான் வேணும்!" என்றார் சாமிநாதன் உடனே.

ஐந்து ரூபா நாணயங்களும், நோட்டும் இடம் மாறின; கைகள் மாறின; வெந்நீர்த் தவலைக்குள் ரூபா நாணயங்கள் விழுந்து நீருக்கடியில் தங்கின.

மணையில் ராஜனும் பத்மாவும் அமர்ந்து ஆரத்தி பெற்றுக்கொண்டனர். புது உடைகள் சலசலக்க மனமும் கலகலத்து, முகமும் பளபளக்க, சாமிநாதனையும், ஸீதாலக்ஷ்மியையும் வணங்கினார்கள்.

"மாமிக்கும் பண்ணுங்கோ," என்றார் சாமிநாதன். ராஜன் உடனே போனான், வணங்கினான். பத்மாவும் குனிந்து வணங்கிவிட்டு எழுந்தாள்.

மனம் நிறைந்த மகிழ்ச்சியுடன் வாய் நிறைய ஆசி கூறி வாழ்த்தினாள் மீனாக்ஷியம்மாள்.

அவள் ஆசி கூறிய பாணி கண்டு கலகலவென நகையொலி எழுந்தது அந்த இடத்திலே.

"பெரியவர்கள் ஆசீர்வாதம் பண்ணுகிறதை கேட்கவே ஆசையாயிருக்கும்!" என்றான் மாப்பிள்ளை ராஜன்.

மாப்பிள்ளையின் வாயினின்று உதிர்ந்த வார்த்தைகளைக் கேட்டதும், ஏகத்தாளமான சிரிப்பொலி அடங்கிவிட்டது, 'புஸ்'ஸென்று சொத்தை வாணம்போல.

** ** **

"அம்மா, ஸீதாலக்ஷ்மி! நான் இவாளோடயே காசிக்குப் போறேன்! அனுப்பிச்சுக் குடுத்துடு என்னை!" என்றாள் மீனாக்ஷியம்மாள்.

"இதென்ன மாமி, திடீர்னு இந்த ஏற்பாடு? ஏன்? ஒரே பரபரப்பா ஆயிட்டேள்?" என்று கேட்டாள் ஸீதாலக்ஷ்மி, வியப்புடன்.

"எனக்கு அப்புறம் துணை சேருவது கஷ்டம்மா! ஏதோ கையிலேயும் சொற்ப பணம் சேர்ந்திருக்கு! போயிடறேன்! காரணம்தான் சொன்னேனம்மா! அவர் கிட்ட சொல்லி ஏற்பாடு பண்ணச் சொல்லிடு!" என்றாள் மீனாக்ஷியம்மாள், கண்டிப்புடன்.

"சரி, மாமி! உங்கள் இஷ்டம்! வற்புறுத்திச் சொல்ல எனக்கும் இஷ்டமில்லே!" என்றாள் ஸீதாலக்ஷ்மி.

கணவரிடம் அன்று சொல்லிவிட்டாள் சமையற்கார அம்மாளின் தீர்மானத்தை.

"கட்டாயம் போகணுமாம், ராமசாமி அய்யரோட குடும்பத்தோடே! நானும் சொல்லியாச்சு! என்னமோ! தீபாவளியானது முதற்கொண்டு ஒரு மாதிரிதான் இருக்கா! என்னிக்கும், எப்பவும் நான் கொஞ்சங்கூட கடுத்துண்டது இல்லே! தீபாவளியின்போதுதான், எனக்கும் இருந்த கவலையிலே அப்பப்போ கொஞ்சம் கண்டிப்பாயிருந்துட்டேன்! அதான் கோபமோ, என்னமோ! இதுக்கெல்லாம் 'துஸ்'ஸுன்னு கோபம், வருத்தம் வந்தால் என்ன செய்யறது! போகணும்னு தோணினப்புறம் நிறுத்தி வைக்கக்கூடாது, நிறுத்தவும் முடியாது! நல்லதனமாவே விட்டுவிடலாம்!" என்றாள் ஸீதாலக்ஷ்மி. இன்னும் ஏதோ சொன்னாள்.

"புருஷன் செத்துப் போனது இரண்டு வருஷம் முந்தின்னா, இப்போ இந்த அலங்கோலம் பண்ணிண்டாகணுமா?... என்னமோ உம், ஏற்பாடு பண்ணிடறேன், அவா துணையிலே புறப்படறதுக்கு. சொல்லு!" என்றார் சாமிநாதன்.

ஏற்பாடு செய்தார் அவர். ராமசாமி அய்யர் வீட்டினின்று காசிப் படிப்புக்குப் போகும் பையனுடன், அவனுடைய அத்தையும் புறப்பட்டாள். அவ்விருவருடன் புறப்பட்டாள் மீனாக்ஷியம்மாள்.

"பத்மா, போய் வரேனம்மா! நீ புக்ககம் போனப்புறம் எனக்கு வீட்டுலே இருப்பே கொள்ளாது போல தோணித்து! அப்புறம் துணைன்னா கிடக்குமா? அதுக்குத்தான் முந்தியே புறப்பட்டுடறேன்! தீர்க்காயுசுடன், தீர்க்க சுமங்கலியாயிரு! போய் வரேம்மா, ஸீதாலக்ஷ்மி!" என்று சொல்லிவிட்டு, கரகரக்கும் தொண்டை மேலே பேசவொட்டாமல் செய்ய, ஊருக்குப் புறப்பட்டாள் மீனாக்ஷியம்மாள்.

"முடியுமானால், பாபுவோட அத்தை திரும்பி வரபோதே நீங்களும் வந்துடப் பாருங்கோ, மாமி!" என்று கூறி விடை கொடுத்தார் சாமிநாதன்.

"விசுவேசுவரன் கிருபை!" என்று பதிலிறுத்தாள் மீனாக்ஷியம்மாள். வண்டியேறினாள்.

தற்கால ரயில் வசதியுடன்தான் காசி போனாள் மீனாக்ஷியம்மாள் என்பதை அறிவார்கள் சாமிநாதனும். ஸீதாலக்ஷ்மியும் எனினும் முற்கால காசிப் பிரயாணிகளைப் போலத்தான் போனாளோ என்று ஐயுறும்படி நாட்கள், வாரங்களாகி கடந்துபோயின. மீனாக்ஷியம்மாளிடமிருந்து கடிதமே காணோம்.

அவ்வூரிலிருந்து காசித் துணை போன பையன் பாபுவும் அவனுடைய அத்தையும், தமிழ்நாட்டிலிருந்து புறப்பட்டு, இவர்களிருக்கும் ஊரில் உறவினர் இருப்பதால் இறங்கிவிட்டுப் பயணம் தொடர்ந்தவர்கள். ஆதலால் உள்ளூர் நண்பர் ராமசாமி வீட்டார் மூலமும் தகவல் தெரியவில்லை.

"பாருங்கோ மீனாக்ஷியம்மாவின் மனசை! கட்டாயம் கடிதம் போடுவாள் என்றுதான் நினைச்சோம். போனாள்! போடக்காணோம்! நாம்ப எந்த விலாஸத்துக்கு எழுதுவோம்?. . . அவ்வளவுதான் விட்டுது பந்தம்! . . . விட்டுப்போச்சு அப்பவே!. அப்படியும் மனசு கேட்கல்லே!" என்றாள் ஸீதாலக்ஷ்மி கணவரிடம்.

"அப்பா! என்னை ஒரு நாள் மாமி கேட்டாள், 'அக்காவும் அத்திம் பேரும் இருக்கிற போட்டோ இன்னும் உள்ளே இருக்கான்னு!' என்று சொன்னாள் லலிதா.

'பாருங்களேன்! ஒளிவு மறைவு என்ன இதுலே! அவளைக் கேட்கிறது என்ன! நம்மைக்கேட்டால் என்ன சொல்லிடுவோம்! 'இருந்தால் இருக்குங்கிறோம்', இல்லைன்னா, 'இல்லேங்கறோம்!'" என்றாள் ஸீதாலக்ஷ்மி.

"ஆனால் போட்டோ காப்பி தருவோமா? சமையற்காரிக்கு எதற்குன்னு சொல்லுவோம்! அதான் காப்பி இருக்கா இல்லையான்னு கேட்டுண்டு, அப்புறம் நம்மைக் கேட்டுப் பார்க்கலாம்னு அவளைக் கேட்டிருப்பா மாமி!" என்றார் சாமிநாதன்.

"அதென்னமோ, சமையற்கார மாமியா லட்சணமா இருக்கல்லே அந்த மாமி! ரொம்ப மரியாதை வச்சு வச்சு . . . " என்று ஆரம்பித்தாள் பத்மா.

"முதல்லே பிடிச்சே அந்த மாமி சமையற்காரியா லட்சணமாவே தோணலே! அதான் எனக்கு அந்த மாமின்னா மரியாதை!" என்றார் சாமிநாதன்.

"அது வாஸ்தவந்தான்! ஆனா அப்புறம், அதான் தீபாவளிக்கப்புறம் மாறிடுத்து சுபாவம்! கொஞ்சம் அன்னிக்கு 'அதாரிடி'யா நடந்துண்டேனென்று இவ்வளவு சுணக்கமான்னு எனக்கும் அப்புறம் ஒரு மாதிரி தோணிடுத்து! . . . சகஜபாவம் இருக்கல்லே! . . . " என்றாள் சீதாலக்ஷ்மி.

எனினும் எல்லோரும், 'ஒரு தகவலும் காணோம் மாமியைப் பற்றி' என்ற நினைப்பு எழுந்தபோது, சிறிது வேதனைப்பட்டார்கள்.

"மாமா! இதோ, எங்காத்து விலாசத்துக்கு கடிதம் வந்திருக்கு!" என்று ஒரு கார்டு கொணர்ந்தான் ராமசாமி வீட்டாரின் பையன்.

காசிக்குப் போன மீனாக்ஷி மாமி கங்கையில் விழுந்து உயிர் நீத்தாள். வேணுமென்று 'விரும்பியேதான் நதியோடு போனாளோ' என்று சந்தேகப்படத் தோன்றுகிறது. ஏனென்றால்' இறப்பதற்கு இரண்டு நாட்களுக்கு முன்பு தான் ஒரு 'கங்கைத் தோண்டி பத்து ரூபாய்க்கு வாங்கினாளாம். "என் பிள்ளை நாட்டுப் பெண்ணுக்கு இதைச் சேர்ப்பித்துவிடணும்," என்று கொடுத்தாளாம்.'பிள்ளையும் நாட்டுப்பெண்ணும் இருக்க இங்கே காசியிலேயே இருப்பானேன்' என்று கேள்வி எழுந்ததற்கு விசித்திரமான பதில் சொன்னாளாம்.

சிறுவயதில், 15, 16 வயதில் வீட்டில் பெற்றோரிடம் கோபித்துக்கொண்டு ஓடின பிள்ளை, நல்ல நிலையில், பெரிய மரியாதையான குடும்பத்தில் மாப்பிள்ளையாக இருப்பதைப் பார்த்துக் கண்ணும் மனமும் குளிர்ந்துவிட்டாளாம்.

நல்ல நிலையிலேயிருக்கும் தாயாரே பிள்ளைக்கும் நாட்டுப் பெண்ணுக்குமிடையே நீடு நிலைத்திருக்க முடியாமற் போகிறது; அப்படியிருக்க நாட்டுப்பெண்ணின் பிறந்தகத்தில் ஊழியம் செய்த தான், எந்த முகத்துடன் பிள்ளை, நாட்டுப் பெண் இவர்களிடம் நிலைத்திருக்க முடியும்? ஆசைப்பட நியாயம் ஏது?

இப்படித்தான் சொன்னாளாம் மீனாக்ஷியம்மாள்.

"அவன் சம்பாத்தியத்திலிருந்து எனக்கு வந்தது ஐந்து ரூபாய், அவன் தொட்டுக் கொடுத்துவிட்டது, மற்றும் ஒரு ஐந்து ரூபாய் இதோ ஆசை தீர, அவனுடைய கடைசி காணிக்கையாக இந்த புனித நீர்ச் செம்பு தர விரும்புகிறேன்" என்று கூறி முடித்தாளாம். அடைத்து அடைத்துக் கார்டில் எழுதியிருந்த இந்த விவரம் படித்து அறிவதற்குள், மூச்சடைத்துப் போகும்போல இருந்தது அனைவருக்கும்.

"அட, பாவமே! "என்ன கஷ்டம்!", "என்ன அநியாயம்?", 'மகா அதிசயம்!" என்றெல்லாம் பொருமினார்கள்.

'அவருடைய அம்மா!' என்ற நினைப்பு, என்றைக்குமே தன் செருக்குக்கும், வாய்த்துடுக்குக்கும் ஒரு சாட்டையடி கொடுக்கக் கூடியது என்று பத்மா உணர்ந்தாள்.

"'சம்பந்தி கிடையாது; இவளுக்கு மாமியார் மாமனார் இல்லைன்னு' சந்தோஷப்பட்டுக்கிற மாதிரி எத்தனை தடவை சொன்னேனோ! என்ன வேதனைப்பட்டிருப்பாள்! எப்போ தெரிஞ்சுதோ அவர் தன் பிள்ளைன்று!" என்று அங்கலாய்த்து அரற்றினாள் சீதாலக்ஷ்மி.

"தீபாவளிக்கப்புறம்தானே ஒரு தினுசாயிருந்ததாகச் சொன்னே? தீபாவளியின் போதுதான் தெரிஞ்சிருக்கும்!" என்றார் சாமிநாதன், ஆனால் அவருக்கும், 'பெற்றமனம் எப்படித் துடித்ததோ?' என்ற வேதனை வாட்டியது.

"எப்படிப்பா தெரிஞ்சுக்கல்லே அவர்?" என்றனர் குழந்தைகள். பெரியவர்கள்தான் மாறிவிட்டார்கள். சிறுவர்கள் நெடுநெடுவென வளர்ந்து மாறிப் போவார்கள். சிறுவர்கள் பெரியவர்களை அடையாளங்கண்டு கொள்வதுதான் எளிது.

ஆனால், பாசம், பிள்ளையைப் பற்றிய நினைப்பு, நினைவுக் குறிகள் - இவைதான் பிள்ளையைக் கண்டுபிடிக்க மாமியை உதவியிருக்கும். மாமி வருத்தத்திலேயும், உழைப்பினாலும் மாறியிருப்பாள் நிறைய. அதனால்தான் மாப்பிள்ளை அம்மாவைக் கண்டுகொண்டிருக்க முடிந்திராது. இதுதான் காரணம் கூறினார் சாமிநாதன்.

"ஓடிப்போன பிள்ளை திரும்பி வருவதற்குத்தான், 'மகா'பிள்ளையாக்கி அவனை வரவேற்று, உபசாரமாக நடத்துகிறோம் என்று சொன்னேனே, சீதா; இப்போ எப்படிச் சொல்றது? நமக்கு மாப்பிள்ளையா, மீனாக்ஷி மாமிக்கு 'மகா' பிள்ளையா?" என்றார் மனைவியைப் பார்த்து. கிலேசமுற்றிருந்த முகத்திலும் லேசான புன்சிரிப்பு கோடிட்டோடியது.

"பாவம், மாப்பிள்ளைக்குத் தெரிந்தால் . . . " என்றாள் சீதாலக்ஷ்மி.

தெரிந்தது உண்மை, ராஜனுக்கு. வந்தது பரிசு செம்பு, அவன் கைக்கு.

பூஜைப் பீடத்திலே வீற்றது அன்னையின் பரிசு. அன்னையே வீற்றாள் அவன் உள்ளத்திலே.

புனித நீரை அடக்கிக்கொண்டிருந்த செம்புபோலவே, அவன் உள்ளமும், தாயுடன் ஏற்பட்ட இடைச் சந்திப்பையும், அவளுடைய கடைக் காணிக்கையையும் அடக்கிப் பதித்துக்கொண்டது.

தன்னுள்ளே கங்கை அகண்டமாக ஓடிப் பிரவகித்தாலும் தீபாவளி தினத்தன்று எங்கெங்கும் யாரும் கங்கா ஸ்னானம் செய்து பெருமை கொள்ள வைக்கும் காசியின் பெருமை, ராஜனின் மனத்தூய்மைக்கும் பெருமைக்கும் ஒக்கும்.

"அம்மாவை நினைத்துவிட்டால் கண்களிலிருந்து கங்கை பெருகி, உடலையும் மனதையும் ஸ்னானம் செய்வித்துவிடுகிறதே!' என்று சொல்கிறான் நடராஜன்.

"கங்காஸ்னானம் ஆச்சா?" என்று தீபாவளிக் குசலம் விசாரிப்பவர்களுக்கும்தான் இந்தப் பதில்!

அவன் வாழ்க்கையிலே, தீபாவளி நாள், அவன் மன நிம்மதியைச் சுட்டுக் கொளுத்திடும் நாள்.

இந்தப் பட்டாசுக்கு ஒலியுமுண்டு, ஒளியுமுண்டு, ஆனால் இந்தப் பட்டாசுக்குத் தீ மூளுவதை யாரும் விரும்புவதில்லை! அவன் மனம் வெடித்துக் குமுறிக் குமைவதை யாரும் விரும்புவதில்லை.

வேண்டாத நல்ல பட்டாசு வெடிகுண்டுதான் அல்லவோ?

**********

(சுதேசமித்திரன், அக்டோபர் 30, நவம்பர் 7/1948)